Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, NOVEMBER 29 2024

வெள்ளிக்கிழமை 29, நவம்பர் 2024 | ஒளி: 10 கதிர் 104 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



## சீரற்ற வானிலையால்

# 13 பேர் பலி

### 4 இலட்சத்து ஆயிரத்து 707 பேர் பாதிப்பு

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 24 மாவட்டங்களில் 120,534 குடும்பங்களைச் சேர்ந்த 401,707 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 12பேர் உயிரிழந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலையால் ஏற்பட்ட அனர்த்தத்தில் 17 பேர் காயமடைந்துள்ளதுடன் ஒருவர் காணாமல் போயுள்ளார். இந்த அனர்த்தத்தில் 91 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. 1662 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட 32,695 பேர் உறவினர்கள் வீடுகள் மற்றும் பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## மின்சாரம் தாக்கி 'தீகதந்து 1' பலி

இலங்கையின் புகழ்பெற்ற 'தீகதந்து 1' யானை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதமான முறையில் பொருத்தப்பட்ட மின்சார வேலியிலிருந்து யானை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது. 40 - 50 வயதுக்கிடைப்பட்ட இந்த யானை, கலா வெவா மற்றும் கஹல்ல-பல்லகெல்ல காப்புக்காடுகளுக்கு அடிக்கடி வந்து செல்வதாக அறியப்படுகிறது.







## அஸ்வெசுமவுக்கு விண்ணப்பிக்க அவகாசம்

அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்கு விண்ணப்பிக்க வழங்கப்பட்ட கூடுதல் அவகாசம் மீண்டும் ஒரு முறை நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிவாரணத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க வழங்கப்பட்ட அவகாசத்தை 09.12.2024 வரை நீட்டிக்க நலன்புரி நன்மைகள் சபை தீர்மானித்துள்ளது.

இதுவரை அஸவெசும நிவாரணப் பயனாளிகள் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியாத குடும்பங்கள் மற்றும் நபர்களுக்கு 25.11.2024 முதல் 02.12.2024 வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. ஆனால் நாட்டில் நிலவும் மோசமான வானிலையை கருத்திற்கொண்டு இந்த காலவகாசம் மேலும் ஒரு முறை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




## உ/த பரீட்சைகளுக்கான புதிய திகதிகளின் விபரம்

நாடளாவிய ரீதியில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 2024 கல்விப் பொதுத் தராதர உயர்தர (உ/த) பரீட்சைகளை டிசம்பர் 3 ஆம் திகதி வரை ஒத்திவைக்க பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, வியாழக்கிழமை (28) தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் டிசம்பர் 4ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## டிசம்பர் 3 முதல் 6 வரை பாராளுமன்றம் கூடும்

பாராளுமன்றத்தை டிசம்பர் 03 ஆம் திகதி முதல் 06ஆம் திகதி வரை கூட்டுவதற்கு சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தலைமையில் கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

இதற்கமைய டிசம்பர் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கொள்கைப் பிரடகனம் குறித்த பிரேரணை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு, மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரை விவாதிக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2



## சேகு இஸ்ஸதீன் காலமானார்

இலங்கை முஸ்லிம்களின் மூத்த அரசியல் தலைமையும் முஸ்லிம் தேசியக்குரலுமான, எழுத்தாளர், கவிஞர், வேதாந்தி சேகு இஸ்ஸதீன் காலமானார். சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்த அவர் அக்கரைப்பற்றில், வியாழக்கிழமை(28) காலமானார்.

முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலின் முதுசம் என்றும் இணைந்த வட-கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் என மக்களால் அழைக்கப்பட்டவர்.

கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்து வரும் மூவின மக்களின் அன்புக்குப் பாத்திரமானவர் . இனவாதம், மதவாதம், பிரதேசவாதமற்ற மூத்த அரசியல்வாதியும் ஆவார். மறைந்த தலைவர் அஷ்ரப்புடன் அரசியலில் ஒன்றாக பயணித்து முஸ்லிம் சமூகத்துக்கு ஒரு தனித்துவ அரசியல் கட்சி தேவை என முஸ்லிம் சமூகத்தை விழிப்படையச் செய்தார். அதில் வெற்றியும் கண்டவர்.

தொடர்ச்சி P2

## "வடக்கு, கிழக்கு பகுதிகளில் இன்னும் மேம்படுத்த வேண்டும்"

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி குறித்த கலந்துரையாடலொன்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் உலக வங்கியின் தலைவர் அஜே பங்கா (Ajay Banga) ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இணையத் தொடர்பாடல் முறையூடாக புதன்கிழமை (27) இடம்பெற்றது.

இதன்போது, புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கம் மற்றும் எதிர்கால அபிவிருத்தி சவால்களை வெற்றி கொள்ள இலங்கைக்கு வழங்க வேண்டிய ஒத்துழைப்புக்கள் குறித்து அஜே பங்கா (Ajay Banga) கருத்து தெரிவித்ததோடு, சுகாதாரம், சமூக பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட துறைகளில் புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்த நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2



## இளைஞர்களிடையே HIV தொற்று அதிகரிப்பு

அலைபேசிகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் மூலம் நண்பர்களை கண்டறிதல் மற்றும் முறையான பாலியல் கல்வி இல்லாதது போன்ற காரணங்களால் இளைஞர்களிடையே HIV தொற்று அதிகரித்துள்ளதாக தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் பதிவான HIV தொற்றுக்களில் 15 சதவீதம் பேர் 15 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் என அந்த திட்டத்தின் இயக்குநர், சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் விந்தியா குமரிபெலி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## அர்ச்சுனா எம்.பி, நீதிமன்றில் சரண்

புதிதாக தெரிவு செய்யப்பட்ட யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா நீதிமன்றில் சரணடைந்ததையடுத்து அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் வியாழக்கிழமை (28) மீளப்பெற்றுள்ளது.

2021 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று, நிகழ்ந்த வீதி விபத்து தொடர்பாக ஆஜராகத் தவறியதற்காக டாக்டர் ராமநாதன் அர்ச்சுனாவை கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# சீரற்ற வானிலையால் 13 பேர் பலி

## 4 இலட்சத்து ஆயிரத்து 707 பேர் பாதிப்பு

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையால், ஒன்பது மாகாணங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தற்போது நிலவும் இந்த மோசமான காலநிலை, இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

மன்னார் மாவட்டம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 63,883 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் 56,732 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.




# உ/த பரீட்சைகளுக்கான புதிய திகதிகளின் விபரம்

நவம்பர் 30, டிசம்பர் 2, டிசம்பர் 3 ஆகிய திகதிகளில் பரீட்சைகளை நடத்துவதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.

திட்டமிட்ட பாடங்களுக்கான பரீட்சைகள் டிசம்பர் 4ம் திகதி கீழ்கண்ட முறையில் நடத்தப்படும்.


நவம்பர் 28 வியாழக்கிழமை நடத்தப்படாத பரீட்சை டிசெம்பர் 23ஆம் திகதியன்றும்

நவம்பர் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்படாத பரீட்சை டிசெம்பர் 27ஆம் திகதியன்றும்

நவம்பர் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்படாத பரீட்சை டிசெம்பர் 28 சனிக்கிழமையும்

டிசெம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமை நடத்தப்படாத பரீட்சை டிசெம்பர் 30ஆம் திகதி திங்கட்கிழமையும்

டிசெம்பர் 3ஆம் திகதி வியாழக்கிழமை நடத்தப்படாத பரீட்சை டிசெம்பர் 31ஆம் திகதி செவ்வாய்கிழமையும் நடத்தப்படும்.



# சேகு இஸ்ஸதீன் காலமானார்

முஸ்லிம் - தமிழ் ஆகிய சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நாட்டில் சில விட்டுக்கொடுப்புகளுடன் ஒருமித்து பயணிக்க வேண்டும் என்று குரல் கொடுத்து வந்ததுடன் வடகிழக்கு இணைந்த மாகாணத்தின் முதலாவது மாகாண சபையின் முதலாவது எதிர்க்கட்சி தலைவர் பதவியை வகித்த காலத்தில் தமிழ் தலைவர்களுடனும் தமிழ் மக்களுடனும் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

பாறுக் ஷிஹான்,நூருல் ஹுதா உமர்

# “வடக்கு, கிழக்கு பகுதிகளில் இன்னும் மேம்படுத்த வேண்டும்”

பொருளாதார கொள்கைகள், நிதி, போட்டித்தன்மை, முதலீடு,நிறுவன மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட விடயங்களில் தற்போதும் உலக வங்கி இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருகின்ற நிலையில், எதிர்காலத்தில் விவசாய அபிவிருத்து, நீர் முகாமைத்துவம், பாதுகாப்பு,சுற்றாடல் நிலைத்தன்மை, சமூக மேம்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் டிஜிட்டல் பரிமாற்றம் ஆகியவற்றுக்கும் ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, கிராமிய பகுதிகளில் வறுமையை ஒழிப்பதற்கு அரசாங்கம் காட்டும் அக்கறை குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, வலுசக்தி துறையின் முதலீடுகளை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தியிருப்பதாகவும், சுற்றுலாத் துறை, கடல்சார் தொழில்துறை, அரச நிறுவனங்கள் மற்றும் வலுசக்தி துறைகளை பலப்படுத்தி அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப்படுத்தல், குறிப்பாக கல்வி, சுகாதாரம், மனிதவள அபிவிருத்தி தொடர்பில் விளக்கமளித்த ஜனாதிபதி, இந்த பகுதிகளில் காணப்படும் தொழிற்படையின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கல்வி மற்றும் தொழில் கல்வித் துறைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

2025 ஜூலை 25 ஆம் திகதி திறக்கப்படவிருக்கும் 20 தெற்காசிய கூட்டு அலுவலகங்களின் அனுசரணை நாடாக இலங்கையும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக கூறிய உலக வங்கியின் தலைவர் உலக வங்கிக் குழுமத்தின் கீழ் காணப்படும் மீள் கட்டியெழுப்பல் மற்றும் அவிருத்திக்கான சர்வதேச வங்கி (IBRD), சர்வதேச அபிவிருத்தி வங்கி (IDA), சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC) மற்றும் பலதரப்பு முதலீட்டு பிணைகளுக்கான முகவர் நிறுவனம் (MIGA) உள்ளிட்ட நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மேற்படி அலுவலகத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.



# டிசம்பர் 3 முதல் 6 வரை பாராளுமன்றம் கூடும்

டிசம்பர் 4ஆம் திகதியும் குறித்த பிரேரணை மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றையதினம் பி.ப 5.00 மணிக்கு வாக்கெடுப்பை நடத்துவதற்கும் கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

டிசம்பர் 05ஆம் திகதி வியாழக்கிழமை எதிர்வரும் மூன்று மாதங்களுக்கான அரசாங்கத்தின் இடைக்கால கணக்கு வாக்கெடுப்புக் குறித்த தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய டிசம்பர் 05ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை விவாதம் நடத்தப்படவுள்ளது. இது பற்றிய விவாதத்தை 06ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரையும் முன்னெடுக்கவும் இணக்கம் காணப்பட்டது.

மேலும், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிக்கான விவாதிக்கும் நேரத்தை ஒதுக்குவது, குழுக்களில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் அமைப்பை நிர்ணயித்தல், தெரிவுக்குழுவை அமைப்பது மற்றும் இதற்கான பெயர்களை முன்மொழிவது, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு மற்றும் ஏனைய குழுக்களை நியமிப்பது, துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் செயற்பாடுகள், பத்தாவது பாராளுமன்றத்திற்கான பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒன்றியத்தை நியமிப்பதற்கான கோரிக்கையை ஆராய்தல் போன்ற விடயங்கள் குறித்த இங்கு கலந்துரையாடப்பட்டது.

# DMT அதிரடி அறிவிப்பு: சாரதிகளே கவனம்

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் (DMT) வழங்கப்பட்ட தற்காலிக வாகன இலக்கத் தகடுகளின் செல்லுபடியாகும் காலம் டிசம்பர் 15 ஆம் திகதியுடன் முடிவடையும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க அறிவித்துள்ளார்.

நிரந்தர இலக்கத் தகடுகளை வழங்குவதில் திணைக்களம் எதிர்கொள்ளும் சவால்கள் காரணமாகவே தற்காலிக வாகன இலக்கத் தகடுகள் வழங்கப்பட்டதாக அவர் கூறினார்.

எனவே, குறித்த காலக்கெடுவிற்கு முன்னர் தமது அசல் இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களிடம் ஆணையாளர் நாயகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

டிசம்பர் 15ம் திகதிக்கு பிறகு தற்காலிக வாகன இலக்கத் தகடு வைத்து வாகனங்களை ஓட்டுவது சட்ட விரோதமாக கருதப்படும். மீறுவோர் மீது தேவையான சட்ட நடவடிக்கை எடுக்க போக்குவரத்து பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இளைஞர்களிடையே HIV தொற்று அதிகரிப்பு



சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

இதற்கமைய, “கடந்த ஆண்டு, HIV வைரஸால் பாதிக்கப்பட்ட 694 புதிய நோயாளிகள் நம் நாட்டில் பதிவாகியுள்ளனர்.

தரவுகளைப் பார்க்கும்போது, புதிதாக HIV வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவது தெளிவாகிறது.

குறிப்பாக இளைஞர்களிடையே கிடைக்கும் தரவுகளைப் பார்க்கும்போது, புதிய நோயாளிகள் 15% பேர் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களாகும்.

இதை மேலும் ஆராயும் போது அலைபேசி உள்ளிட்ட பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் மூலம் புதிய உறவுமுறை கூட்டாளர்களை கண்டுபிடிப்பதே இதற்குக் காரணம் என்று தெரிகிறது.

அல்லது சரியான பாலியல் கல்வி பெறவில்லை. சில மருந்துகளுக்கு அடிமையாதல் போன்ற விடயங்கள் இளைஞர்களிடையே புதிய தொற்றுநோய்களின் அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது” என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அர்ச்சுனா எம்.பி, நீதிமன்றில் சரண்

டாக்டர் அர்ச்சுனாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டிருந்த நிலையில் நீதிமன்றத் திகதியை மறந்துவிட்டதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்த உண்மைகளை கருத்திற்கொண்ட மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா, டாக்டர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை மீளப்பெற தீர்மானித்தார்.

# உழவு இயந்திரம் விபத்து: 7 ஜனாஸாக்கள் மீட்பு

நூருல் ஹுதா உமர்

காரைதீவு மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனவர்களில் இதுவரை 07 சடலங்கள் (ஜனாஸாக்கள் ) மீட்கப்பட்டுள்ளது

காரைதீவு - மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போகியிருந்த நிலையில் 26 ஆம் திகதி மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கையின்போது 5 மாணவர்கள் வெள்ளத்தில் இருந்து காப்பாற்றப்பட்டனர்.

அன்றிரவு இருள் சூழ்ந்திருந்த போதிலும் மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்தது. மூன்றாவது நாளாகவும் வியாழக்கிழமை (28) மீட்பு பணிகள் இடம்பெற்று வந்தது. அதன்போது இதுவரை மொத்தமாக 07 ஜனாஸாக்கள் மீட்புப்பணியாளர்களினால் மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதில் நிந்தவூர் காஷிபுல் உலூம் அறபுக் கல்லூரி மாணவர்களின் ஜனாசாவும், வாகன சாரதியின் ஜனாஸாவும் மீட்கப்பட்டது. வெள்ளத்தில் காணாமல் போனவர்களை தொடர்ந்து தேடும் நடவடிக்கை மீட்பு பணியாளர்களால் இடம் பெற்று வந்த நிலையில், வியாழக்கிழமை (28) காலை இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மத்ரஸா முடிந்து மாணவர்களும் உழவு இயந்திர சாரதி மற்றும் உதவியாளரும் பயணித்துக்கொண்டிருந்த தருணத்தில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மீட்பு பணியின் போது விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டும், உழவு இயந்திரமும் மீட்கப்பட்டதுடன், இதில் பயணித்தவர்கள் எத்தனை பேர், எத்தனை பேர் காணாமல் போனார்கள் என்பதை துல்லியமாக கூற முடியாத நிலை உள்ளதாகவும், குறைந்தது இன்னும் 02 பேராவது வெள்ளத்தில் அள்ளுண்டு சென்றிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் ஜவாஹீர் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைகள் முடிக்கப்பட்டு குடும்பத்தினரிடம் ஜனாஸாக்கள் கையளிக்கப்பட்டு வருகிறது.

# “விளக்கேற்ற அழைத்த சிறிதரன் திருப்பி அனுப்பி விட்டார்”

## மூன்று மாவீரர்களின் தாய் கவலை



பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், என்னை விளக்கேற்ற வருமாறு அழைத்துவிட்டு திருப்பி அனுப்பி விட்டார் என மூன்று மாவீரர்களின் தாயொருவர் கண்ணீருடன் கவலைத் தெரிவித்துள்ளார்.

.அவர் மேலும் தெரிவிக்கையில்

“கடந்த செவ்வாய்க்கிழமை (26) மாலை 6.55 மணியளவில் தொலைபேசியூடாக தொடர்பு கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் , நீங்கள் மூன்று மாவீரர்களின் தாயா? என வினவினார் எனது மூன்று பிள்ளைகளின் விபரங்களை கேட்டு அறிந்து கொண்ட பின்னர், புதன்கிழமை (27) அன்று கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் நீங்கள் பொதுச் சுடரேற்ற வேண்டும் வருகை தாருங்கள் என்றார். நானும் சம்மதம் தெரிவித்தேன்மா

வீரர் நாளன்று 6.05 மணிக்கு விளக்கேற்றும் நேரம் நான் சரியாக 5 மணிக்கு கனகபுரம் துயிலுமில்லத்திற்கு சென்றேன். அங்கு நின்றவர்கள் தங்களை ஏற்பாட்டுக் குழு எனத் தெரிவித்து நாங்கள் வேறொருவரை ஏற்பாடு செய்துவிட்டோம் எனத் தெரிவித்து என்னை திருப்பி அனுப்பிவிட்டனர். இது எனக்கு மிகுந்த மன வேதனையை தருகிறது மூன்று மாவீரர்களின் தாயான என்னை அவர்கள் அவமதித்துவிட்டனர்.

சிறிதரன் எம்.பி யின் அழைப்பிற்கு அமைய, முழங்கால் வரை தண்ணீரால் நிரம்பியுள்ள எனது வீட்டுக்குச் செல்லும் பாதையால் சிரமத்திற்கு மத்தியில் பிரதான வீதிக்கு வந்து வாகனம் ஒன்றில் மாவீரர் நாளன்று சரியாக 5 மணிக்கு கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்திற்கு சென்றேன். ஆனால் அங்கு நான் அவமதிக்கப்பட்டேன். இயக்கம் ஒரு மாவீரரின் தாயை இவ்வாறு நடத்தியது கிடையாது. இந்த மண்ணுக்காக நான் எனது மூன்று பிள்ளைகளை கொடுத்திருக்கிறேன்” என கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

# “ஈடு செய்ய முடியாத இழப்பு”



கிழக்கு மாகாணத்தின் சிரேஷ்ட அரசியல்வாதியான வேதாந்தி அல்-ஹாஜ் சேகு இஸ்ஸதீனின் மறைவு கிழக்கு மாகாணத்திற்கு மாத்திரமின்றி முழு நாட்டிற்கும் ஈடு செய்ய முடியாத ஒரு மாபெரும் இழப்பாகும் என முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் அல்-ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மக்கார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் கூறியுள்ளார்.

அவர் தனது செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளராக,பாராளுமன்ற உறுப்பினராக,பிரதி அமைச்சராக,இராஜாங்க அமைச்சராக,கிழக்கு மாகாண சபை உறுப்பினராக பதவிகள் வகித்து மர்ஹூம் சேகு இஸ்ஸதீன் சமூகத்திற்கும் நாட்டிற்கும் விசேடமாக கிழக்கிற்கும் ஆற்றிய பணிகள் மகத்தானது.

கிழக்கு ஈன்றெடுத்த தவப்புதல்வர்கள் பலர்.அவர்களில் ஒருவராக மர்ஹூம் வேதாந்தி சேகு இஸ்ஸதீன் திகழ்ந்தார். மனித நேயம் மிக்க மகத்தான மனிதராக அவர் விளங்கினார்.

அரசியல் மூலம் சமூகத்திற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த மகா புருஷராவார். முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்காக வேண்டி தனது இறுதி மூச்சு வரை பாடுபட்டார். அவரிடம் கற்க வேண்டியவை அநேகம் உள்ளன.

சிறந்த தலைமைத்துவப் பண்புகளை கொண்டிருந்த மர்ஹூம் சேகு இஸ்ஸதீன் சகல சமூகங்களாலும் நன்கு மதிக்கப்பட்டவராக விளங்கினார். அரசியல்,நீதியும் நேர்மையும்,மாற்று கட்சி அரசியல்வாதிகளை மதிக்கும் நல்ல பண்புகளையும் கொண்டவராகவும் காணப்பட்ட இவரது ஆளுமை பணிகள் காலத்தால் அழியாதவை. பசுமரத்தாணி போல் நெஞ்சில் நிழலாடும்.

மர்ஹூம் சேகு இஸ்ஸதீன், என்னோடு மிக நெருக்கமாகவே கடைசி வரை இருந்தார். அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு அரசியல் பிரசாரத்திற்காக சென்ற சமயம் வீடு சென்று நோய் விசாரித்தேன். தனது கடைசி தருவாயிலும் கூட சமூகத்தின் எதிர்கால விமோசனம் பற்றியதாகவே இருந்தது.

நீதி,நேர்மை உள்ளிட்ட பல பண்புகளை கொண்ட இவர் அரசியலோடு பொதுப்பணியிலும் விசேடமாக கலை இலக்கியப் பணியிலும் ஈடுபட்டார்.இளம் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளார். ஆன்மீகத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அவர் மறுமை வாழ்வுக்காக நிறையவே சம்பாதித்திருக்கிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# நுழைவுப் பரீட்சை பிற்போடப்பட்டது

சீரற்ற காலநிலை காரணமாக டிசெம்பரில் நடைபெறவிருந்த இலங்கை சட்டக்கல்லூரி பொது நுழைவுப் பரீட்சையை பிற்போடுவதற்கு பரீட்சை திணைக்களம் தீர்மானித்துள்ளது. வியாழக்கிழமை (28) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட புள்ளியியல் மற்றும் புள்ளியியல் அதிகாரிகளுக்கான முதலாவது திறன் பரீட்சை (2016/24) ஒரே திகதிகளில் நடத்தப்படாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.இது தொடர்பான இரண்டு பரீட்சைகளும் டிசெம்பர் 01 மற்றும் 02 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நிலையில் அது தொடர்பான பரீட்சைகள் அந்தத் திகதிகளில் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சாரம் தாக்கி பெண் பலி

கல்கிரியாகம, புப்போகம பிரதேசத்தில் பெண் ஒருவர் மின்சாரம் தாக்கி புதன்கிழமை (27) உயிரிழந்துள்ளதாக கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புபோகம கட்டுப்பத்தாகம பிரதேசத்தை சேர்ந்த, இரண்டு குழந்தைகளின் தாயான 31 வயதுடைய உபேக்ஷா பிரசங்கனி பாலனி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தின் போது குறித்த பெண் அவரது குழந்தைகளுடன் வீட்டில் இருந்துள்ளதாகவும் வீட்டிற்கு பொருத்தப்பட்டிருந்த மின் கம்பியில் மின்சாரம் பாய்ந்து அவர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# சிறந்த விமான பங்குதாரர் ஸ்ரீலங்கன்




தென்னிந்தியாவில் சுற்றுலா தளத்தை மேம்படுத்துவதில் விமான சேவையில் சிறந்த பங்களிப்பை அளித்த விமான சேவையாக ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் விமானம் “சிறந்த விமான பங்குதாரர்" விருதை பெற்றுள்ளது.

2024 ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் திகதி நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருது ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

செப்டம்பர் மாதம் நடைபெற்ற தெற்காசிய பயண விருதுகளில், பார்வையாளர்களின் தேர்வு மூலம் தேர்வர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தெற்காசியாவின் சிறந்த முன்னணி சர்வதேச விமான நிறுவனமாக ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்த கடந்த சில மாதங்களில் ஸ்ரீ லங்கன் நிறுவனம் பெரும் இரண்டாவது கௌரவத்தை இந்தப் பாராட்டு குறிக்கிறது

.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**பொல்ஹேன விலா ஹக்மன (பீவீஉ) எல்டீடி**
பீவி 00309092
இல. 01. சேதர செனரத்
ஆயுர்வேத வீதி, கெபிலியபொல,
ஹக்மனா.

**டார்கட்ஒன்லைன்.எல்கே (பிரைவட்) லிமிட்டட்**
பீவி 8684
இல. 03, பண்டாரநாயக்கபுர வீதி, ராஜகிரிய.
**கம்பனியின் புதிய பெயர்**
**ஐடியா.எல்கே (பீவீஉ) எல்டீடி**

**எஃப்டபிள்யூ பார்ட்னர்ஸ் (பீவீஉ) எல்டீடி**
பீவி 00257527
நிலை 12, மாக ஒன்று, இல. 200, நாவல வீதி,
நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.
**கம்பனியின் புதிய பெயர்**
**ஹொரைஸன் கேபிடல் வென்சர்ஸ் (பீவீஉ) எல்டீடி**

**ஷிகா ட்ரை வித் எர்த் கம்பெனி (பிரைவட்) லிமிட்டட்.**
பீவி 7572
இல. 315, மல்வான வீதி, பியகம.
**கம்பனியின் புதிய பெயர்**
**ஷிகாட்ரை வித் ஏர்த் கம்பெனி (பிரைவட்) லிமிட்டட்**

**(இயக்குநர்கள்)**

## கம்பஹா மாநகர சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வர– செலவு திட்டம்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 212(பி) பிரிவின்படி, அத்தியாயம் 252, கம்பஹா மாநகர சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்ட வரவு செலவுத் திட்டம் 2024.12.01 ஆம் திகதி முதல் 07 நாட்களுக்கு இந்த அலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**லோச்சனா பாலசூரியா**
**நகராட்சி ஆணையர் மற்றும் அதிகாரங்கள், செயல்பாடு மற்றும் பணி**
**நிர்வாக அதிகாரி**
**கம்பஹா மாநகர சபை.**
**2024.11.29**

















# 2024 பட்டமளிப்பு விழா

■ **எம்.யூ.எம்.சனூன்**

அமேசன் உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (24) வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதன் போது 80 Diploma மாணவர்களும், 80 HND மாணவர்களும் 100 Bachelors மாணவர்களும் ,20 Masters மாணவர்களும் விருதுகளை பெற்றனர்.

> **அமேசன் உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா சிறந்த விரிவுரையாளர்களுக்கான விருதினை உளவியலாளர் சப்ரா லரீப் பெற்றுக்கொண்டார். சிறந்த இணை நிறுவனத்திற்கான விருதினை ஹேமந்த விஜேவர்தன பெற்றுக்கொண்டார்.**

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினுடைய பதில் துணைவேந்தர் டொக்டர் யூ.எல். அப்துல் மஜீத் , சிறப்பு அதிதியாக மாலைத்தீவினுடைய பாராளுமன்ற உறுப்பினர் ஹுசைன் ஷரீப், விசேட அதிதிகளாக ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தினுடைய மானுடவியல் துறை சார் நிபுணர் பேராசிரியர் பிரனீத் அபேய்சுந்தர, களனி பல்கலைக்கழகத்தினுடைய மொழியியல் துறை சார் நிபுணர் பேராசிரியர் எஸ்.ஜே.யோகராஜா மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினுடைய குற்றவியல் துறையில் மூத்த விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் ஒரு சிறப்பம்சமாக இந் நிகழ்விலே ஐக்கிய இராஜ்ஜியத்தின் பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனமான ABE நிறுவனத்தினுடைய அங்கீகாரம் அமேசன் கெம்பசுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த விரிவுரையாளர்களுக்கான விருதினை உளவியலாளர் சப்ரா லரீப் பெற்றுக்கொண்டார். சிறந்த இணை நிறுவனத்திற்கான விருதினை ஹேமந்த விஜேவர்தன பெற்றுக்கொண்டார். சுமார் 400 க்கும் அதிகமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்நிகழ்வை அலங்கரித்தனர் என அமேசன் கல்லூரியின் பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார் தெரிவித்தார்.

# வெள்ளம் வடிந்தாலும் அதன் பக்கவிளைவுகள் அதிகமாகும்

தீவுப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக, தாழ்வான பகுதிகள் மற்றும் நகரப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பலர் தங்கள் வீடுகளை கூட இழந்துள்ளனர், பல மனித உயிர்களைப் பறித்துள்ளன. வெள்ளத்தால் குடிசைகள் மற்றும் வீடுகள் பகுதியளவும் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. வெள்ளம் மெல்ல வடிந்தாலும் அதன் பக்கவிளைவுகள் அதிகமாகும்.

வெள்ளம் வடிந்ததும் தொற்று நோய்கள் மற்றும் சிறுநீர் பாதை தொற்றுகள் பரவ வாய்ப்புள்ளது. வெள்ளத்தால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வெள்ளம் காரணமாக சுற்றுச்சூழல் நீர் மாசுபாட்டை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளை நாம் அறிந்திருக்க வேண்டும்.

சுற்றுச்சூழல், நீர் மாசுபடுவதற்கு பல காரணங்கள் உள்ளன, ஆனால் குறிப்பாக மனித மற்றும் விலங்குகளின் கழிவுகள் சிறுநீர், வெள்ளத்தில் கலந்த இரசாயனங்கள், இறந்த விலங்குகளின் உடல் பாகங்கள், புழுக்கள் மற்றும் பாம்புகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிப்பது பெரும் பேரழிவுகள் ஆகும். இதில் ஏராளமான ரசாயனங்கள் கலந்திருப்பதாலும், கழிவறைகளில் வழிந்தோடும் நச்சுத் தண்ணீராலும் பல உடல்நலக் கோளாறுகள் ஏற்படுகின்றன. இதன்காரணமாக அசுத்தமான நீரில் தங்கி அந்த நீரால் உடல் மற்றும் கைகால்களை கழுவுதல் கூடாது.

மஞ்சள் காமாலை பற்றிய விழிப்புணர்வை ஒரு நோயாளிக்கு தேவையான ஆலோசனை மற்றும் நடத்தை பற்றி மருத்துவரிடம் கூறுவதன் மூலமும் அறியலாம். மருத்துவ ஆலோசனைப்படி செயல்பட்டால் நோய் குணமாகும். ஆனால், மழையுடன் ஏற்படும் வெள்ளத்தால் சுகாதாரக்கேடால், ஏற்படும் மற்றொரு நோய் காய்ச்சல். இது அசுத்தமான மற்றும் நச்சு நீர் மூலம் பரவுகிறது. எனவே, குழந்தைக்கோ அல்லது பெரியவர்களுக்கோ காய்ச்சல் அல்லது வேறு ஏதேனும் நோய் ஏற்பட்டால், உடனடியாக மருத்துவரிடம் சிகிச்சை பெறுவதன் மூலம் நிலைமையைப் புரிந்து கொள்ளலாம். மழையால் ஏற்படும் மற்றொரு ஆபத்தான நோய் எலிக்காய்ச்சல் ஆகும்,

பாக்டீரியா உடலில் நுழைந்த இரண்டு முதல் இருபத்தி ஒரு நாட்களுக்குள் அறிகுறிகள் தோன்றும். அதிக காய்ச்சல், தசை வலி, தலைவலி. கண் சிவத்தல், சிறுநீர் கழித்தல் குறைதல், சுவாசிப்பதில் சிரமம் மற்றும் மயக்கம் ஏற்படலாம். இத்தகைய அறிகுறிகள் தொடர்ந்தால், மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

இரத்தினபுரி மாவட்டத்தில்மொத்தம் 1,882 லெப்டோஸ்பிரோசிஸ் (எலிக்காய்ச்சல்) நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இது இந்த ஆண்டு நோயினால் அதிக எண்ணிக்கையிலான இறப்புகளைக் குறிக்கிறது.

எலிக்காய்ச்சலுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் சிறுநீரகம், இதயம் மற்றும் மூளை ஆகிய உறுப்புகள் செயலிழந்து மரணம் கூட ஏற்படலாம் எலிக்காய்ச்சலுக்கு இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளனர். 2023 இல், 1,400 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். 2024 இல் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவை மட்டுமன்றி வயிற்றுப்போக்கு என்பது மலம் மற்றும் சிறுநீர் கலந்த அசுத்தமான நீரைக் குடிப்பதாலும், அசுத்தமான உணவை உண்பதாலும் ஏற்படும் பொதுவான நோயாகும். வெள்ளம் ஏற்படும் பகுதிகளில் வயிற்றுப்போக்கு மிகவும் பொதுவானது. ஆகையால், வெள்ளத்துக்குப் பின்னர் சுகாதார நடைமுறைகளை மிகக்கவனமாக கையாளவேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சிரிக்காதவன் வாழ்க்கை சுருங்கி விடுகிறது. புன்முறுவல் என்றும் அன்பினைக் காட்டும் வடிவங்கள்.

கடுப்பான முகத்துடன் இருப்பவர்களை எவருமே கண்டுகொள்ள மாட்டார்கள். ஒருவனை உடன் கவருவது, அவரின் முகம் மட்டுமல்ல, அகமூடாக வெளிப்படும் உணர்வைச் சுட்டும் உதட்டின் ஊடான சிரிப்பும்தான்.

முறைத்தபடி பார்ப்பதும் எவராவது பேச முற்பட்டால், சிடுசிடுப்பாகப் பேசுவதை எவர்தான் இரசிக்கப் போகின்றார்கள்?

எனினும் நல்ல மனிதர்கள் கூட, மக்களுடன் பழகத் தெரியாமல் இருப்பதுண்டு. எங்களைச் சுற்றி இருப்பவர்களுடன், பழகாமல் இருக்கக்கூடாது.

இதனால், அன்புடன் பாசத்துடன் பேசும் திறன் அற்றுப்போய்விடும். இவர்களுக்கு, 'திமிர்' பிடித்தவர் என்ற கெட்டபெயரும் வந்துவிடும். ஒருவர் பேசாமல் தயங்கினால், நீங்கள் அவருடன் கனிவுடன் நடந்துகொள்ளுங்கள்.

எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்கமுடியாது. வெட்கம், தாழ்வுமனப்பான்மை சுபாவம் சிலருக்கு உண்டு. சிரித்து மகிழ்ந்தால், எல்லோரும் அழகுதான்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### விவசாயிகள் கோரிக்கை

விகாராதிபதியினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது விவசாயக் காணிகளை பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குச்சவெளி - திரியாய் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட ஆத்திக்காட்டுவெளி பகுதியில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் காணிகளில் பௌத்த பிக்கு ஒருவர் விவசாயம் மேற்கொண்டு வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை தமது வாழ்வாதாரத்திற்காக மீட்டுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஆத்திக்காடு பகுதியில் உள்ள 88 ஏக்கர் காணி பானாமுரே திலகவங்ச நாயக்க தேரர் என்ற பௌத்த பிக்கு ஒருவரின் பெயரில் தற்காலிக இடாப்பு பதிவு மேற்கொள்ளப்பட்டு கிட்டத்தட்ட 3 வருடங்களாக சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதற்காக அரசாங்கத்திடம் இருந்து 20 சிங்கள மக்களின் பெயரில் மானியப் பசளை பெற்று வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 88 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட காணிகள் அப்பகுதியில் உள்ள சப்தநாக பப்பத வன சென்சுன விகாரைக்குரியது என குறிப்பிட்டு ஆக்கிரமிக்கப்பட்டு புத்த பிக்கு ஒருவரின் தலைமையின்கீழ் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எஸ்.கீதபொன்கலன்

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 28

# அபிவிருத்தியா? அரசியல் அபிலாசைகளா?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

அபிவிருத்தியின் ஊடாகப் பொருளாதார மேம்பாட்டைச் சாத்தியமாக்கி, எந்தவொரு வெளிப்படையான அரசு சீர்திருத்தமும் இல்லாமல் சிறுபான்மையினரின் குறைகளை நிவர்த்தி செய்வதன் மூலம், சமாதானத்தை உருவாக்குவதற்கான முதன்மை அணுகுமுறையாக அபிவிருத்தி வழி சமாதானம் என்பது இலங்கையின் பிரதானமான கதையாடலாக இருக்கின்றது.

இந்த அணுகுமுறை சமாதானம் மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டின் பெரும் அரசியல் தன்மையை அடிப்படையில் குறைத்து மதிப்பிட்டுள்ளது. 2002-2005 சமாதான முன்னெடுப்புகளின் போதும், 2007க்குப் பிந்தைய காலப்பகுதியிலும், இலங்கை அரசாங்கம் போர்க்கால ஆதாயங்களை ஒருங்கிணைத்தபோது, முதலில் கிழக்கு மாகாணத்திலும், 2009 மே மாதம் வடக்கில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் இதுவே நடந்துள்ளது. இன்றும் இனப்பிரச்சனைக்கான தீர்வு குறித்த பார்வைகள் "அபிவிருத்திப் பிரச்சனைகளைக் களைதல்" என்ற பொருளிலேயே நோக்கப்படுகின்றன.

இந்த அணுகுமுறை எவ்வளவு தவறானது என்பதை, சமாதான காலத்தில் முன்னெடுக்கப்பட்ட இரண்டு முன்னெடுப்புகள் தெளிவாகக் காட்டுகின்றன. உடனடி மனிதாபிமான மற்றும் மறுவாழ்வு தேவைகளுக்கான துணைக்குழு (SIuRN) மற்றும் சுனாமிக்குப் பிந்திய நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பு (P-TOMS) ஆகிய மறுவாழ்வு மற்றும் புனரமைப்பை இலக்காகக் கொண்ட இரண்டு இடைநிலை ஏற்பாடுகள் தோல்வி இதை உறுதி செய்கின்றது.

போருக்குப் பிறகு, "அமைதி" என்பது "அபிவிருத்தியுடன்" சமப்படுத்தப்பட்டு, போருக்குப் பிந்தைய அரசியல் தீர்வு பற்றிய எந்தவொரு கருத்தாக்கத்திலிருந்தும் விவாகரத்து செய்யப்பட்டது. இது சமூக பதட்டங்களை அதிகப்படுத்துவதற்கு மட்டுமே உதவுகிறது. எனவே, "பொருளாதார ஈவுத்தொகையில்" முதன்மையாக கவனம் செலுத்தும் தாராளவாத சமாதானத் திட்டங்கள் நிலையான சமாதானத்தையோ ஸ்திரத்தன்மையையோ உருவாக்க வாய்ப்பில்லை.

சமாதானத்திற்கான முதன்மை மூலோபாயமாக அபிவிருத்தி என்பது உண்மையான அரசியல் சீர்திருத்தத்திற்கு மாற்றாக முடியாது. எனவே வட கிழக்கின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பது அதன் உள்ளார்ந்த அரசியல் தன்மையை புறக்கணிக்கும் முற்றிலும் பொருளாதார நடவடிக்கையாக பார்க்கப்பட்டதன் விளைவுகளை போர் முடிந்து 15 ஆண்டுகளின் பின்னரும் விளங்குவோர் மிகச் சொற்பம்.

செப்டம்பர் 2002 மற்றும் ஏப்ரல் 2003 க்கு இடையில், இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஆறு சுற்று சமாதான பேச்சுவார்த்தைகளை நடத்தின. இது புலிகளின் வெளியேற்றத்துடன் முடிவுக்கு வந்தது.

வாஷிங்டன் டி.சி.யில் நடைபெற்ற உதவி வழங்குனர் மாநாட்டில் இருந்து அவர்கள் விலக்கப்பட்டமை, போர் நிறுத்த உடன்படிக்கைகளின் இயல்பான அம்சங்களை முழுமையாக செயல்படுத்துவதில் அரசாங்கம் தவறியமை மற்றும் வடகிழக்கு மறுசீரமைப்பில் மெதுவான முன்னேற்றம் ஆகியவற்றை தமது விலகலுக்கான காரணங்களாக புலிகள் முன்வைத்தனர்.

SIu RN மற்றும் அதைத் தொடர்ந்து P-TOMS ஆகியவற்றின் தோல்விக்குப் பிரதானமாக ஐந்து

காரணிகள் அடையாளங் காணப்பட்டுள்ளன:

1. ஒரு சட்ட கட்டமைப்பிற்குள் பொறிமுறைகளை நிலைநிறுத்துவதில் தோல்விகண்டமை.
2. பொறிமுறைகளை, குறிப்பாக ளுஐசுNயை மிகவும் மையப்படுத்தப்பட்ட இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பின் பகுதியாக்கியமை
3. சமாதான முன்னெடுப்புகள் மற்றும் அதன் அரசியல் செல்வாக்கின் மீதான சமூக-பொருளாதார தாக்கத்தை கருத்தில் கொள்ளத் தவறியமை.
4. நிலையான அமைதி மற்றும் உண்மையில் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முன் தேவையாக அரச சீர்திருத்தத்திற்கான பெரும் தேவையை உணராமை.
5. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் பகுதியாக இந்த முனைப்புகளை முன்னிறுத்தாமை.

இவை அனைத்தும் அரசியல் காரணிகளே என்பதும் "புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அரசியல்;" என்ற தளத்திலே இவை நோக்கப்பட வேண்டும் என்பதும் முக்கியமானது. இதேவகைப்பட்ட தவறுகளை போருக்குப் பிந்தைய இலங்கை அரசாங்கங்களும் செய்தன.

சமாதான முன்னெடுப்புகளின் போது அபிவிருத்தியின் மூலம் சமாதானம்' முன்னுதாரணத்தை உருவகப்படுத்தி, அன்றாட வாழ்க்கையை இயல்பாக்கி தேசியவாதக் கருத்துக்களைக் குறைக்கும் என்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

மேலும் பொருளாதார நன்மைகள் மூலம் விடுதலைப் புலிகளை குறைந்தபட்சம் தற்காலிகமாவது அடக்கிவிட முடியும் என்று நம்பியது. மறுபுறம் முரண்பாட்டிற்கு காரணத்தை அபிவிருத்தியின் பேரில் திசைதிருப்பி அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பொறிமுறையை அரசியலற்றதாக்க முயன்றனர். அவர்களின் பங்கிற்கு, புலிகள் பேச்சுவார்த்தை செயல்முறைக்கு ஒரு கட்டம் கட்டமான அணுகுமுறையை விரும்பினர். இதன் மூலம் முக்கிய பிரச்சினைகளை விவாதிப்பதற்கு முன்னர் அவசர மனிதாபிமான தேவைகள் கையாளப்பட்டன.

எனவே, புலிகள் SIuRNI ஐ மனிதாபிமான மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஒரு இடைக்கால தற்காலிக பொறிமுறையாகக் கருதினர்.

அரசாங்கம், அதன் பங்கிற்கு, சிங்கள தேசியவாத கூறுகளின் எதிர்ப்பைத் தவிர்ப்பதற்காக, இக்கட்டமைப்பை அரசியலற்றதாக்க முயன்றது. மேலும், வடக்கு-கிழக்கு மக்களின் கடினமான வாழ்க்கை நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, மோதலின் பின்விளைவுகளை அனுபவித்த மக்கள் மத்தியில் சட்டபூர்வமான தன்மையைப் பெறுவதற்கான புலிகளின் உந்துதலுக்கு ளுஐர்சுN முக்கியமானது.

நவீன அரசின் சட்டப்பூர்வ தன்மை ரூசூ39;மக்கள் இறையாண்மையில்" அடித்தளமாக உள்ளது, எனவே சர்வதேச சமூகத்துள் அங்கீகாரம் தேடும் ஜனநாயகமற்ற ஆட்சிகள் கூட மக்களிடமிருந்து தங்கள் நியாயத்தன்மையைப் பெறுவதற்கு முயல்கின்றன.

இந்த சந்தர்ப்பத்தில், SIu;RNI புலிகளுக்கு வடக்கு-கிழக்கு மக்கள் மத்தியில் அவர்களின் சட்டபூர்வமான தன்மையைப் பேணுவதற்கு ஒரு முக்கியமான பொறிமுறையை வழங்கியது. SIu;RNI ஸ்தாபிப்பதற்கு அரசாங்கமும் புலிகளும் உடன்பட்ட போது, இரண்டு தரப்பினரும் இலங்கையில் புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் அரசியற் தன்மையை உணரத் தவறிவிட்டன.

ஐ.தே.கட்சியின் அபிவிருத்தியுடன் வெளிப்படையாக சமாதானத்தை இணைக்கும் உத்தியானது, தெற்கின் ஆதரவைப் பெறும் அதே வேளையில் புலிகளை சமாதானச் செயற்பாட்டில் ஈடுபட வைக்கும் என்ற அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டது. எவ்வாறாயினும், அபிவிருத்தி மூலம் சமாதானம் என்ற கருத்தாக்கம் அபிவிருத்தியின் அரசியல் தன்மையை, குறிப்பாக தென்னிலங்கை அரசியலால் முன்வைக்கப்பட்ட சவால்களை புறக்கணித்தது என்பது தெளிவாகிறது.

போரிட்ட தரப்புகளுக்கிடையே அவநம்பிக்கையை அதிகப்படுத்த மட்டுமே உதவிய அபிவிருத்தியின் பிரித்தாளும் அரசியலை அது புறக்கணித்தது. எடுத்துக்காட்டாக, வட-கிழக்குக்கு அளவுக்கதிகமான வழங்கப்படுகின்றன என்ற கருத்தைச் சுற்றியுள்ள அதிருப்தியின் தொடர்ச்சியான அதிருப்தி, SIURN க்கு எதிராக அரசாங்க அதிகாரிகளுக்கு அதிக சந்தேகங்களை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்தது, இது SIuRNfகும் அரசாங்க நிறுவனங்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பைக் குறைக்க வழிவகுத்தது.

போரால் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் முற்றாகச் சீரழிந்திருந்த போதிலும், தென்பகுதி மக்கள் மத்தியில் வடக்கு-கிழக்கிற்கு அபிவிருத்தி உதவிகளின் விகிதாசாரமற்ற முறையில் வழங்கப்படுவதான செய்திகள் பரப்பப்பட்டன.

நாட்டின் மிக முக்கியமான வாக்களிக்கும் தொகுதியான தென்னிலங்கை வாக்காளர்களை வென்றெடுக்கவியலாமை அரசாங்கத்திற்குப் பாரிய பின்னடைவாகும்.

இந்த தோல்வியானது 'அபிவிருத்தியின் ஊடாக சமாதானம்' மூலோபாயத்தின் முக்கியமான குறைபாடாகும். இது சமாதான முயற்சியை கடுமையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது.

தென்னிலங்கை மக்கள் சமாதானம் ஏற்பட்டதால் விளைந்த "பொருளாதார நலன்கள்" மூலமாகவும் பயனடைகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தை அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தவறிவிட்டது. உண்மையில், சராசரி குடிமக்களைப் பொறுத்தவரை, பொருளாதாரப் பிரச்சினைகள் மோதலை விட முன்னுரிமை பெற்றன என்பதை புரிந்து கொள்ள அரசாங்கம் தவறிவிட்டது. தென்பகுதி மக்கள் மோதலை வடக்கு- கிழக்கை விட குறைவான தீவிரமான முறையில் அனுபவித்தது இதற்கொரு காரணம்.

பெரும்பான்மையான சிங்களவர்கள் யுத்தத்தை நேரிடையாக அனுபவிக்கவில்லை. அவர்களுக்கு மாறாக வறுமை மற்றும் உயர் வாழ்க்கைச் செலவுகளே மிகப் பெரிய பிரச்சினைகளாகும். போர் நிறுத்த உடன்படிக்கை மற்றும் சமாதான முன்னெடுப்புகள் அவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வைக் கொண்டுவரவில்லை என அவர்கள் நினைத்தனர்.

உதாரணமாக, ஐ.தே.கட்சியினால் வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கு பதிலாக, ஏற்கனவே உள்ள திட்டங்கள் குறைக்கப்பட்டன.

### இலண்டன் அரங்கை அலங்கரித்த

# அழகிய அரங்கேற்றம்

கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன்



இலண்டன் மாநகரில் The Beck Theatre இல் செல்வி லக்ஷ்மி சத்தியலிங்கத்தின் வயலின் அரங்கேற்றம் 21.09.2024 சனிக்கிழமையன்று வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

தெய்வீக இறை வணக்கத்துடன் ஆரம்பித்த இந்நிகழ்வில் முதலாவதாக லக்ஷ்மி சாருகேசி இராகத்தில் அமைந்த லால்குடி ஜெயராமனின் பதவர்ணத்துடன் கச்சேரியைத் தொடங்கினார். காதுக்கினிய கமகங்கள் செவியை நிறைத்தன.

அடுத்து 'ஸ்ரீ மகா கணபதிம்' எனும் முத்துசாமி தீட்சிகர் கிருதி, மிக்ஷ்ர சாப்பு தாளத்தில் அமைந்து சபையைக் கிரங்க வைத்தது. கௌளை ராக ரிக்ஷபம் அழகாக இவரால் கையாளப்பட்டது. சொற்கட்டு ஸ்வரங்கள் கற்பனா ஸ்வரங்கள் பாடலுக்கு மெருகூட்டின. தொடர்ந்து கோவர்த்தன கிரிக்ஷம் ஹிந்தோள ராகத்தை அழகிய ராக பாவத்தில் வாசித்து சபையோரை மகிழ்வித்தார். அடுத்து நிரவதி சுகதா சிட்டை, ஸ்வரங்களுடன் இசைத்து சபையோரை உற்சாகப்படுத்தினார்.

பாபநாசம் சிவன் இயற்றிய சௌக்க கால கிருதியான 'சரவண பவ குகனே' எனும் பிரதான உருப்படி, மத்தியமாவதி ராகத்தில் அமைந்திருந்தது. தாள வாத்தியங்களின் அற்புதமான அனுசரணையுடன் கற்பனா ஸ்வரங்கள் ,குறைப்பு, கோர்வை என்பன மிக நேர்த்தியாக லக்ஷ்மியால் கையாளப்பட்டுச் சபையைப் பிரமிக்க வைத்தது. அதனைத் தொடர்ந்து தனி ஆவர்த்தனம் பாடலுக்கு மகுடமாக அமைந்திருந்தது.

இடைவேளையின் பின்னர், இசையரங்கின் முக்கிய அம்சமான ராகம் தானம் பல்லவி இடம்பெற்றது. குரு லால்குடி GJR கிருக்ஷ்ணனின் அழகிய பல்லவியான 'வா கா குகா முருகா சண்முகா பிரியனே மயிலேறி' சண்முகப் பிரியா ராகத்திலும் கண்ட திரிபுட தாளத்திலும் அமைய இதனை லக்ஷ்மி மிகக் கச்சிதமாக இசைத்துச் சபையின் பலத்த கரகோக்ஷத்தைப் பெற்றுக் கொண்டார். நிறைவாக பாரதியாரின் 'சின்னஞ் சிறு கிளியே', லால்குடி ஜெயராமின் பெஹாக் இராக தில்லானா, திருப்புகழ், மங்களம் என்பன மனதிற்கு இன்பத்தைத் தர விழா இனிதே நிறைவேறியது. இந்நிகழ்வுக்கு சங்கீத வித்வான் AGA ஞானசுந்தரம் பிரதம விருந்தினராக வருகை தந்தார். ஸ்ரீ M. பாலசந்தர், ஸ்ரீ R N பிரகாக்ஷ், ஸ்ரீ S அபிராம், செல்வி சுருதி சிவலீலன் ஆகியோர் தாள வாத்தியங்களுடன் அரங்கிசையை மெருகூட்டினர். விழா முழுமையையும் ஸ்ரீமதி ஆனந்தராணி பாலேந்திரா சிறப்பாகத் தொகுத்து வழங்கினார். கலாரசிகப் பெருமக்களின் ஆசியுடனும் மகிழ்வுடனும் லக்ஷ்மி பெருமிதத்துடன் அரங்கை நிறைவுசெய்தார்.

லக்ஷ்மிக்கு அமரர் கலாநிதிகாரை செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் தாய்வழி பேரனாவார். அவர் இறைவனடி சேர்ந்த தினமன்று இந்த அரங்கேற்றம் நடைபெற்றமை ஆத்மார்த்த நிகழ்வாகும். சங்கீத கலாநிதி ஸ்ரீ லால்குடி GJR கிருக்ஷ்ணனையும், சங்கீத கலாவித்தகர் தாயார் ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தையும் குருவாகக் கொண்ட லக்ஷ்மியின் கடின உழைப்பும், குரு லால்குடி கிருக்ஷ்ணன் அவர்களின் முன்முனைப்பும், பயிற்சி நெறிகளும் அரங்கேற்றத்தின் சிறப்பில் பிரதிபலித்தன. குருவின் வழிகாட்டலில் அமைந்த மனோதர்மம் தேர்ந்தெடுத்த உருப்படிகள், இனிமையான ஸ்வர கோர்வைகளின் அமைப்பு என்பன சபையை எப்போதும் கவர்ந்திருந்தன. சங்கீத கலாநிதி ஸ்ரீ லால்குடி GJR கிருக்ஷ்ணனிற்கு இலண்டனில் இது முதலாவது அரங்கேற்றமென்பதும் பெருமைக்குரிய விடயமாகும்.











# 127 வருட கால முன்னேற்றத்தை கொண்டாடும் Baurs



Baurs என அறியப்படும் A. Baur & Co. (Pvt.) Ltd.நிறுவனம், இந்த ஆண்டு தனது வியாபார அலகுகளில் 127 வருட கால தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றை கொண்டாடுகின்றது.

2021 ஆம் ஆண்டில், நாடு விவசாயத் துறையில் சேதன உரத்தை பயன்படுத்தும் தீர்மானத்தை மேற்கொண்ட போது, தன்னகத்தே கொண்டுள்ள நீண்ட கால ஆய்வு மற்றும் விருத்தி முயற்சிகள் மற்றும் நிலைபேறான சேதன விவசாயத்துக்கான திரண்ட பிரதான கருப்பொருள் ஆகியவற்றைக் கொண்டும், சுவிட்ஸர்லாந்தை தளமாகக் கொண்ட FiBL மற்றும் HAFL ஆகியவற்றின் நிபுணர்களுடன், உள்நாட்டைச் சேர்ந்த விவசாயத்துறையின் பங்காளர்களையும் இணைத்து அந்த சவாலை Baurs ஏற்றிருந்தது.

2018 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்ட பரிசோதனைகள் வெற்றியளித்திருந்ததை தொடர்ந்து இந்த ஆண்டின் முற்பகுதியில், சுப்பர் யூரியா வணிக விற்பனைகள் ஆரம்பிக்கப்படுவதாக அறிவித்திருந்தது. நைதரசன் இரட்டை உறுதியாக்கியைக் கொண்ட சுப்பர் யூரியா, அமோனியா ஆவியாதலையும், மண்ணில் நைரசன் உரம் நைற்றேற்றம் அடைதலையும் குறைப்பதுடன், நைதரசன் உர பிரயோகத்தை வினைத்திறனான முறையில் மேற்கொண்டு, விளைச்சலை அதிகரிக்கச் செய்து, சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைத்து, நிலைபேறான விவசாய செயன்முறைகளை ஊக்குவிக்கின்றது. அதனூடாக நாடு முழுவதிலும் சமூகத்தார் மத்தியில் ஆரோக்கியமான உணவை பெற்றுக் கொடுப்பதில் பங்களிப்புச் செய்கின்றது.

தனது பரந்த விநியோகத்தர் வலையமைப்பு மற்றும் உலகத் தரம் வாய்ந்த சேவை மற்றும் தொழினுட்ப ஒன்றிணைப்பு போன்றவற்றினூடாக, அதன் மருந்துப் பொருட்கள் வியாபாரம் வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. கடந்த ஆண்டில், புகழ்பெற்ற பல்தேசிய மருந்தாக்கல் நிறுவனமாகத் திகழும் GSK இன், பரிந்துரைக்கப்படும் மருந்துப் பொருட்கள் மற்றும் வக்சீன்களை இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிக்கும் ஏக உரிமைக்கான உடன்படிக்கையில் Baurs கைச்சாத்திட்டிருந்தது. உலகளாவிய ரீதியிலான சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமங்களைக் கொண்ட தனது பிரிவுகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில், ஜேர்மன் பல்தேசிய மருத்துவ சாதன நிறுவனமான Fresenius Medical Care Lanka இன் இலங்கைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு Baurs கைகோர்த்திருந்தது.

தனது டிஜிட்டல் மாற்றியமைப்பு முயற்சிகளில் Baurs நீண்ட தூரம் பயணித்துள்ளது. வெறும் நடமாடல், தரவு மற்றும் பகுப்பாய்வு போன்றவற்றுக்கு அப்பால் sales force automation ஐ கொண்டு சென்று, பல்வேறு வியாபாரங்கள் மற்றும் நாளிகைகளை பரந்தளவில் ஒன்றிணைக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளது. அத்துடன், சைபர் பாதுகாப்பு மற்றும் இடர் மீட்சி ஏற்பாடுகளையும், ML, AIமற்றும் IoT போன்ற இதர செயற்பாடுகளையும் பெருமளவில் மேற்கொண்ட வண்ணமுள்ளது. அதன் தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் அனோஜா பஸ்நாயக்க, பல திட்டங்களை முன்னின்று வழிநடத்துவதுடன், இலங்கை கணனி சங்கத்தின் 2023 ஆம் ஆண்டின் அறிமுக தேசிய CIO நிரலில் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

உலகத் தரம் வாய்ந்த விருந்தோம்பல் கல்வியை தனது Swiss Hotel Management Academy (SHMA) மற்றும் நிலைபேறான வளர்ச்சிக்கான திறன்கள் (SSG) செயற்திட்டத்தினூடாக Baurs வழங்குகின்றது. மாணவர்களுக்கு விருந்தோம்பல் தொடர்பான தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொடுப்பது மாத்திரமன்றி, பிரயோக திறன்களையும், உலகத்தரமான அனுபவம் மற்றும் மென் திறன் விருத்தி ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் சுவிஸ் அரசாங்கத்தின் நிதியளிப்பில் இந்தப் பங்காண்மைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த ஆண்டில் நாடு முழுவதிலும் 10 பயிலல் நிலையங்களை திறந்துள்ளதனூடாக SSG செயற்திட்டம் புதிய மைல்கல்லை எய்தியுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 2,240 இளைஞர்களின் திறன்களை மேம்படுத்தும் இலக்கை கொண்டுள்ளது.


நிறுவனத்தின் நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரலில், அதன் தலைமையகத்தில் 168.56 kWp கொள்ளளவை கொண்ட புதிய சூரியபடல் நிறுவுகையை மேற்கொண்டிருந்தது. நிறுவனத்தின் 60 சதவீதமான வலுத் தேவையை நிவர்த்தி செய்யக்கூடியதாக அமைந்துள்ளதுடன், வருடாந்தம் 233,792 kWh பிறப்பிக்கும் ஆற்றலைக் கொண்டது. இதனூடாக Baurs நிறுவனத்துக்கு 170,622கிலோகிராம் காபன் வெளியீடுகளை ஒவ்வொரு ஆண்டும் தவிர்ப்பதற்கும், சூழலில் அதன் காபன் வெளியீட்டை குறைப்பதிலும் பங்களிப்பு வழங்குகின்றது. 7 MW சோலர் கட்டமைப்பை அதன் களஞ்சியசாலைகள் மற்றும் இதர வளாகங்களில் நிறுவுவதற்கு முதலீடுகளை மேற்கொள்ள Baurs திட்டமிட்டுள்ளது.


### Sun Siyam பாசிகுடா

# மனம்மறவாத பண்டிகைக் காலத்தை ஏற்படுத்தவுள்ளது

கிழக்கு கரையோரத்தில் அமைந்துள்ள Sun Siyam பாசிகுடா, பண்டிகைக் காலத்தை மனம்மறவாத கொண்டாட்டங்களுடன் அனுபவித்து மகிழ இணைந்து கொள்ளுமாறு அழைத்துள்ளது. இத்தாலிய பொப் பாடகரும் பாடல் எழுத்தாளருமான Matilde G மற்றும் இலங்கையின் DJ மற்றும் இசையமைப்பாளருமான DJ Rapa ஆகியோர், Sun Siyam பாசிகுடாவில் டிசம்பர் மாதத்தை மனம் மறவாத அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுக்க கைகோர்க்கவுள்ளனர்.

விருந்தினர்களுக்கு டிசம்பர் 21ஆம் திகதி Sun Siyam பாசிகுடாவில், உலகளாவிய ரீதியில் பல மேடைகளில் கச்சேரிகளை முன்னெடுத்துள்ளஇத்தாலிய பொப் பாடகர் மற்றும் பாடலாசிரியரான Matilde Gபங்கேற்று மகிழ்விக்கவுள்ளார். இவர் துபாயில் மத்திய கிழக்குக்கு அப்பால் வசிக்கும் சிறந்த பாடகருக்கான "MUSIVV Award 2023"விருதை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. யுனிவர்சல் மியுசிக் குரூப்பினால் விநியோகிக்கப்பட்ட சுயாதீன கலைஞரான இவரின் இசை 10 மில்லியனுக்கும் அதிகமான ஸ்ட்ரீம்களை பெற்றுள்ளதுடன், 8 மில்லியனுக்கு அதிகமான YouTube பார்வைகளையும் பெற்றுள்ளது. மாலைதீவுகளில் Sun Siyam ரிசோர்ட் உடன் Matilde கைகோர்த்து, சிங்கப்பூர் 2023 Formula 1 Grand Prix போன்ற உயர்மட்ட நிகழ்வுகளில் கச்சேரிகளை முன்னெடுத்துள்ளார். அதனூடாக, வளர்ந்து வரும் சர்வதேச நட்சத்திரமாக தன்னை நிலைநிறுத்தியுள்ளார்.





Sun Siyam பாசிகுடாவில் நத்தார் தினத்துக்கு முதல் நாள் மாலைப் பொழுதில்Matilde G மீண்டும் இணைந்து, இலங்கையின் புகழ்பெற்ற DJ மற்றும் இசையமைப்பாளரான DJ Rapaஉடன் நத்தாரை வரவேற்பதற்கான இரவு கொண்டாட்டங்களில் பங்கேற்பார். அன்றைய தினத்தில் சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் Xmas cookie தயாரிப்பு வகுப்பையும் ஹோட்டல் முன்னெடுக்கும்.

நத்தார் தினத்தன்று, விருந்தினர்களுக்கு மனம் மறவாத பண்டிகை மதிய உணவு வேளையை அனுபவிக்க முடியும். அதற்கு முன்னதாக நீச்சல் தடாகத்தை அண்மித்த பகுதியில் DJ RAPA இன் நேரலை DJ இசை நிகழ்வுகள் இடம்பெறும். மாலையில், BBQ இராப் போசணத்துடன், நத்தார் தாத்தாவின் வருகைக்கான களிப்பூட்டும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும். அத்துடன், விருந்தினர்களுக்கு Aqua Lounge பகுதியில் சூரியன் மறையும் வேளையில் இனிய cocktailகளை அனுபவிக்க முடியும்.

வருட நிறைவை கொண்டாடும் வகையில் Sun Siyam பாசிகுடா நாள் முழுவதும் பல கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்ய திட்டமிட்டுள்ளது. சிறுவர்களுக்கு கொண்டாட்டத்தை வழங்கும் வகையில், களிப்பூட்டும் அம்சங்கள் நிறைந்த புதையல் தேடலில் பங்கேற்க முடியும் என்பதுடன், ஏனைய அனைவரும் நீச்சல் தடாகத்துக்கு அருகாமையில் ஓய்வான DJ இசையை ரசிக்க முடியும். டிசம்பர் மாத இறுதி நாள் மாலைப் பொழுதில் புதுவருடத்தை வரவேற்கும் வகையில் மாபெரும் இராப்போசண நிகழ்வு கரையோரப் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், 2025 ஐ வரவேற்பதற்கான நேரம் அறிவிப்பும் இடம்பெறும். புதுவருடத்தை குறிக்கும் வகையில், விருந்தினர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து பால் பொங்கி இலங்கையின் பாரம்பரிய கொண்டாட்டங்களில் ஈடுபடுவர். அதனைத் தொடர்ந்து புது வருடத்தின் முதலாவது காலை உணவு பரிமாறப்படும்.





# மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

யுத்தத்தில் உயிர்நீத்த மாவீரர்களுக்கு, வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்கள், மாவீரர் நாளான, செப்டெம்பர் 27ஆம் திகதியன்று, உணர்வெழுச்சியுடன், மக்கள் அஞ்சலி செலுத்தினர். (தமிழ்மிரர் நிருபர்கள்)


























அமெரிக்கா

ட்ரம்பால் நியமிக்கப்படோருக்கு

# கொலை மிரட்டல்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு வன்முறை மற்றும் உயிருக்கு ஆபத்து போன்ற மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களது உறவினர்களுக்கும் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக, டிரம்ப் மாறுதலுக்கான (Trump transition- ஆட்சி அதிகாரம் மாறுதல்) செய்தி தொடர்பாளர் கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, இலக்கு வைக்கப்பட்டவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய சட்ட அமலாக்க மற்றும் பிற அதிகாரிகள் விரைவாக செயற்பட்டனர்.

மேலும், நியூயோர்க்கில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எலிஸ் ஸ்டெபானிக் உள்ளிட்டோருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இவர், ஐ.நா.வின் அடுத்த தூதுவராக செயற்பட இருக்கிறார்.

இதுவரை பாதுகாப்பு, வீட்டு வசதி, விவசாயம் மற்றும் தொழிலாளர் துறை மற்றும் ஐ.நா. வுக்கான அமெரிக்க தூதுவர் உட்பட டிரம்ப் தேர்ந்தெடுத்த 9 பேருக்கு மிரட்டல் விடப்பட்டுள்ளது.

இந்த வாரம் வெடிகுண்டு மிரட்டலுக்கு இலக்கான அனைவரும், அமெரிக்க உளவு துறையால் பாதுகாக்கப்படவில்லை என ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும், பொலிஸாருடன் வெள்ளை மாளிகை தொடர்ந்து தொடர்பில் உள்ளது என, ஜனாதிபதி பைடன் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

டிரம்ப் நியமித்தவர்களில் பலருக்கும் பைப் வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டு உள்ளது. இதேபோன்று, பாலஸ்தீன ஆதரவு பெற்ற வாசகங்களும் அந்த மிரட்டலுடன் செய்தியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என, அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல்

# ஹிஸ்புல்லா வான்படை தலைவர் பலி



ஹிஸ்புல்லா வான்படையின் தலைவரும் துணை தளபதியுமான ஜாபர் அலி சமஹா பெய்ரூட் நகரில் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என, இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ தகவலை அமெரிக்க அதிபர் பைடன் வெளியிட்டார். லெபனானில் நடந்து வரும் ஹிஸ்புல்லா அமைப்புடனான மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவையும் ஒப்புகொண்டுள்ளது.

இந்த சூழலிலேயே, ஹிஸ்புல்லா வான் படையின் தலைவரும் துணை தளபதியுமான ஜாபர் அலி சமஹா பெய்ரூட் நகரில் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என, இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான்

பழங்குடியின குழுக்கள் இடையே

# தொடர் மோதல்; 76 பேர் பலி

பாகிஸ்தானில், பழங்குடியின குழுக்கள் இடையே ஏற்பட்ட தொடர் மோதல்களில் 76 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் - கைபர் பக்துன்குவா மாகாணத்தின் லோயர் குர்ரம் மாவட்டத்தில், பழங்குடியின குழுக்கள் இடையே தொடர்ந்து மோதல் ஏற்பட்டு வருகிறது. ஒரு வாரத்திற்கும் மேலாக நடந்து வரும் இந்த மோதலில் பலர் பலியாகி வருகின்றனர்.

அண்மையில், வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த 40 பேர் மீது திடீரென மறைந்திருந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மண்டோரி சார்கெல் பகுதியில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில், 40 பேரும் உயிரிழந்தனர்.

இதனை தொடர்ந்து 2 நாட்கள் கழித்து, இதே மாவட்டத்தின் பகன் கிராம பகுதியில், துப்பாக்கி சூடு மற்றும் தீ வைப்பு உள்ளிட்ட தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் 21 பேர் பலியானார்கள். இதனை தொடர்ந்து, அதிகாரிகள் அந்த பகுதிக்கு சென்று சமரசத்திற்கான போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தினார்கள். எனினும், செவ்வாய்க்கிழமை (25), மீண்டும் மோதல் வெடித்தது.

கோஜாகரி, மதசாநகர் மற்றும் குஞ்ச் அலிஜாய் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட மோதல்களில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். 6 பேர் காயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, இந்த வன்முறையால் மொத்த பலி எண்ணிக்கை 76ஆக உயர்ந்து உள்ளது. இதனால், அந்தப் பகுதியில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

வயநாடு

# பதவியேற்றார் பிரியங்கா



வயநாடு மக்களவை தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியின் பிரியங்கா காந்தி வதேரா எம்.பி.யாக, வியாழக்கிழமை (28) பதவியேற்றுக் கொண்டார்.

அவருக்கு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கையில் அரசியல் சாசன புத்தகத்தை ஏந்தியபடி பிரியங்கா காந்தி பதவியேற்றுக் கொண்டார்.

இதன்போது கேரளாவின் பாரம்பரிய சேலையான கசவு சேலையை அணிந்திருந்தார். இதன் மூலம் மக்களவையில் ராகுல் காந்தியும், பிரியங்கா காந்தியும், மாநிலங்களவையில் சோனியா காந்தியும் எம்.பி.க்களாக உள்ளனர்.

அதேபோல் நான்டட் மக்களவை தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸின் ரவீந்திர வசந்த்ராவ் சவானும் எம்.பி.யாக பதவியேற்றுக் கொண்டார்.

ஆந்திரா

மருந்து நிறுவனத்தில்

# நச்சு வாயு கசிவு; ஒருவர் பலி




ஆந்திர பிரதேசத்தின் அனகாபள்ளி மாவட்டம், பரவடா பகுதியில் உள்ள தனியார் மருந்து நிறுவனம் ஒன்றில் திடீரென ஏற்பட்ட நச்சு வாயு கசிவால், ஒருவர் உயிரிழந்ததுடன், 9 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்திற்கு ஆந்திர பிரதேச முன்னாள் முதல்-மந்திரி மற்றும் ஒய். எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவரான ஜெகன் மோகன் ரெட்டி வருத்தம் தெரிவித்துள்ளார்.

ஆந்திர பிரதேச முன்னாள் அமைச்சர் குடிவடா அமர்நாத் பாதிக்கப்படோரை நேரில் சந்தித்ததுடன், "இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன என கூறினார்.

இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# 191 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த தென்னாபிரிக்கா



இலக்கைக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 191 ஓட்டங்களை தென்னாபிரிக்கா பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், டேர்பனில் புதன்கிழமை (27) ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட தென்னாபிரிக்கா, அசித பெர்ணாண்டோ (3), விஷ்வ பெர்ணாண்டோ (2), லஹிரு குமார (3), பிரபாத் ஜெயசூரியவிடம் (2) விக்கெட்டுகளை இழந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் தெம்பா பவுமா 70, கேஷவ் மஹராஜ் 24 ஓட்டங்களைப் பெற்றார்.

நியூசிலாந்துக்கெதிரான

# முதலாவது டெஸ்டில் முன்னிலையில் இங்கிலாந்து



நியூசிலாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் வியாழக்கிழமை (28) ஆரம்பித்த முதலாவது போட்டியின் நேற்றைய முதல் நாள் முடிவில் இங்கிலாந்து முன்னிலையில் காணப்படுகிறது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

நியூசிலாந்து: 319/8 (துடுப்பாட்டம்: கேன் வில்லியம்சன் 93, டொம் லேதம் 47, கிளென் பிலிப்ஸ் ஆ.இ 41, றஷின் றவீந்திர 34 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொய்ப் பஷிர் 4/69, பிறைடன் கார்ஸ் 2/57, குஸ் அட்கின்ஸன் 2/61)



# லெய்செஸ்டரின் முகாமையாளராக வான் நிஸ்டெல்ரூய்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லெய்செஸ்டர் சிற்றியின் முகாமையாளராக இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்னாள் உதவிப் பயிற்றுவிப்பாளர் ரூட் வான் நிஸ்டெல்ரூய் நியமிக்கப்படவுள்ளார்.

பதவி நீக்கப்பட்ட ஸ்டீவ் கூப்பரையே வான் நிஸ்டெல்ரூய் பிரதியிடவுள்ளார்.


சம்பியன்ஸ் லீக்:

# றியல் மட்றிட்டை வென்றது லிவர்பூல்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் வியாழக்கிழமை (28) நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட்டுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக அலெக்ஸிஸ் மக் அலிஸ்டர், கோடி கக்போ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில் இன்னொரு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான அஸ்தன் வில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் சமப்படுத்தியது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 29, நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.